வவுனியா மாவட்டத்தில் தாதியர் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தொடர்ந்து வவுனியா வைத்தியசாலையிலும், யாழ்ப்பாணத்திலுள்ள சில வைத்தியசாலைகளிலும் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

இவர்கள் தாதியர் பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டு சுமார் ஒன்றரைவருடங்களான போதிலும், இன்னும் தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு அனுமதி கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பயிற்சிக்குத் தெரிவானவர்களில் ஏழு பேர் வவுனியா அரசினர் வைத்திய சாலையிலும் சுமார் முப்பது பேர் யாழ். மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளிலும் பயிற்சி பெற்று வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

## மரத்தில் இருந்து வீழ்ந்தவர் மரணம்

(தெல்லிப்பளை)

கடந்த புதன் கிழமையன்று காலைஇளவாலையைசேர்ந்த அற்புதம்எட்வேட் (வயது 35) பனை மரத்தில் ஏறும்போது தவறி விழுந்தவர் ஆவார் அவரை உடனே தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஆனால் வைத்தியசாலைக்குச் செல்லு முன்னரே இவர்இறந்துவிட்டார். (ம)

## போக்குவரத்து கஷ்டம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு இறுபிட்டிப் பகுதிக்கு நடாத்தப்பட்டுவந்த இ. போ. ச பஸ்சேவை நிறுத்தப்பட்டுள்ளதால் இப்பகுதி மக்கள் பெரும் பிரயாணக் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். மேலும் இம் மக்கள் பெரும்பாலும் கால் நடையாக வந்து பெருங்காட்டுச் சந்தியிலிருந்து பிரயாணத்தை தொடரவேண்டியுள்ளது.

சுத்தம் சுகம் தரும்
சுகாதார முறையில் தயாரிக்கப்படும்
T. K. ஸ்பெசல் மார்க் நல்லெண்ணை
தரமானது. நம்பிக்கையானது.....
உணவு வகைகள் தயாரிக்கவும்
உடலுக்கு உறுதி அளிக்கவும்
உங்கள் கேசத்திற்கு குளிர்மையூட்டவும்
தி. க. ஸ்பெசல் மார்க் நல்லெண்ணை
கிடைக்குமிடம்:
தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ் ஆனைக்கோட்டை.
(B-991)

உயர்தரமான உள்ளூர் உற்பத்திகள்

கிடைக்குமிடம்:

# தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்

ஆனைக்கோட்டை.

(B-991)

கல்மடு அ.த.க. வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை இல்லவிளையாட்டுப் போட்டி நடை பெற்றது.

புதுக்குளம் கொத்தணி அதிபர் திரு. ஐ. இராஜரட்ணம் மேற்படி விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (தி)

மாகி தொடர்ந்து பத்து நாட்களுக்கு நடைபெறும்.

இருபத்தேழாம் திகதி புதன் கிழமை வேட்டைத் திருவிழாவும், இருபத்தெட்டாம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் நடைபெற்று பூர்த்தி நாளாகிய ஆனி உத்தரதினத்தன்று தீர்த்த திருவிழாவுடன் மகோற்சவம் நிறைவு பெறும். (22)

கடந்த புதன் கிழமையன்று காலைஇளவாலையைசேர்ந்த அற்புதம்எட்வேட் (வயது 35) பனைமரத்தில் ஏறும்போது தவறி விழுந்தவர் ஆவார் அவரை உடனே தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஆனால் வைத்தியசாலைக்குச் செல்லு முன்னரே இவர்இறந்துவிட்டார். (ம)

தப்பட்டுள்ளதால் இப்பகுதி மக்கள் பெரும் பிரயாணக் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். மேலும் இம் மக்கள் பெரும்பாலும் கால் நடையாக வந்து பெருங்காட்டுச் சந்தியிலிருந்து பிரயாணத்தை தொடரவேண்டியுள்ளது.

# உயர்தரமான உள்ளூர் உற்பத்திகள்

- சேட்டிங்...
- வேட்டி வகைகள்...
- பிஜாமா சாரங்கள்...
- மற்றும் நவநாகரிக வகைகளிலும், வண்ணங்களிலும் சகலவிதமான 'சின்தற்றிக்' துணிவகைகள் அனைத்தையும் உற்பத்தி செய்யும் நிறுவனம்

# லீனாரெக்ஸ் இன்டஸ்ரீ (லங்கா) லிமிட்டெட்

## புத்தூர்

# LINATEX INDUSTRY (LANKA) LTD.

## PUTTUR.

(B.988)

தண்டுக்குளி [illegible] நூலகம்

சிந்தனைக்கு

உணர்ச்சியை, உணர்ச்சிதான் புரிந்துகொள்ளமுடியும்.
- ஹன்ரீஷ்ஷைனெ

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 16-06-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

## பேடித்தனமான போர்முறை வேண்டாம்!

போர் தொடங்கி ஐந்து நாட்களாகி விட்டன. நேற்றுவரை ஓயவில்லை. இத்தலையங்கம் எழுதும்போது நீதிஅமைச்சரும் வடக்கு கிழக்கு மாகாண சமாதானக் குழுத்தலைவருமான ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் யாழ்ப்பாணத்துக்கு வந்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தார்.

அமைச்சர் ஹமீதின் முயற்சி வெற்றிபெற்று வாசகநேயர்கள் இத்தலையங்கத்தைப் படிக்கும்சமயத்தில் போர் நிறுத்தம் இருதரப்பிலும் நல்ல முறையில் பின்பற்றப்படும் என்று எதிர்பார்ப்போம்.

சில நாட்களுக்கு முன்னர் துட்டகைமுனுவின் சிலையைத்திறந்துவைத்து ஜனாதிபதிரணசிங்கபிரேமதாசா பேசுகையில், பகைவனுக்கும் மதிப்புக் கொடுத்தவன், பகைவனையும் கௌரவமாக நடத்தியவன் துட்டகைமுனு என்று குறிப்பிட்டிருந்தார்.

மன்னன் எல்லாளனுடன் சமர்புரிந்த துட்டகைமுனு, எல்லாளன் யானையிலிருந்து வீழ்ந்து மாண்டபின் அவனுக்கு வணக்கம்தெரிவித்து அவனை அடக்கம்செய்து, அந்த இடத்தைக் கடந்து செல்பவர்கள் நின்று வணக்கம் செலுத்திச் செல்லவேண்டுமென்று கட்டளையுமிட்டான்.

சமீபகாலத்தில் சிங்களத்தில் துட்டகைமுனுபற்றி வெளிவந்த நூல்களிலும் பாடப்புத்தகங்களிலும் இப்பகுதி இடம்பெறாமல் இருட்டடிப்புச் செய்யப்பட்டு இருந்தது.

இப்பொழுது உண்மையான வரலாற்றை ஜனாதிபதி பிரேமதாசா துணிச்சலுடன் எடுத்துக் கூறியிருப்பது பாராட்டுக்குரியது.

இதேசமயம் திரு. பிரேமதாசா ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் இப்பொழுது இலங்கை அரச படைகளுக்கும் விடுதலைப்புலி வீரர்களுக்குமிடையில் முதல்தடவையாக மோதல் ஏற்பட்டிருக்கிறது.

இந்த மோதலிலும் லலித்அத்துலத்முதலி தேசியபந்தோபஸ்து அமைச்சராக இருந்தபோது வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட கூலிப் பட்டாளங்களான மொஸாட், எஸ். ஏ. எஸ். போன்றவை பழக்கிக் கொடுத்த பேடித்தனமான போர்முறையே பின்பற்றப்பட்டு வருகிறது.

இஸ்ரேலின் நலன்காக்கும் பிரிவை அமெரிக்காவின் ஆட்சேபனையையும் பொருட்படுத்தாமல் மூடி அங்கு இருந்தவர்களைத் திருப்பி அனுப்பியவர் ஜனாதிபதி பிரேமதாசா.

ஆனால் புலிகளுக்கும் சிறிலங்கா அரசபடைகளுக்கும் கடந்த ஐந்து நாட்களாக நடந்துவரும் போரில் சிறிலங்கா அரசபடைகள் இஸ்ரேலிய மொஸாட் பாணி போர் முறையையே கடைப்பிடித்து வருகிறது.

மன்னன் எல்லாளனையும் ...

# பிரித்தானிய - மத்திய கிழக்கு எதிர்ப்பு

## ஓர் பின்னணி

"மத்திய கிழக்கின் எண்ணைவளத்தினை அடுத்து வரும் நூற்றாண்டிலும் மேற்குலகம் நம்பியிருக்க வேண்டிய நிலையில் மத்திய கிழக்கில் மேற்குலக நாடுகளின் பாதுகாப்பும், செல்வாக்கும்பேணப் படுதல்அவசியம்'' என்றுபிரித்தானிய பிரதம மந்திரி மார்க்கிரட் தட்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரதம மந்திரியின் இவ்வாறான பேச்சானது ஐரோப்பாவில் தொடர்ந்தும் இராணுவத்தளங்களைவைத் திருப்



பதற்கான சூழ்நிலையை உருவாக்கி விடுதல் என்பதையே காட்டுகிறது எனலாம்.

இதற்கு முன்னால் பிரித்தானியப் பிரதம மந்திரியின் இந் நோக்கின் பின்னணியினைப் பார்ப்போம்.

### கம்யூனிச பிரச்சாரம்

இதுவரை காலமும் சோவியத் யூனியனையும், கம்யூனிச கருத்துக்களையும் முன் வைத்தே மேற்குலக நாடு



### மறுசீரமைப்பினால் மாற்றங்கள்

கொர்பசேவினால் கொண்டுவரப்பட்ட "மறுசீரமைப்பு'' கொள்கை உள்நாட்டில் சில பிரச்சினைகளை கொடுத்தபோதிலும்சர்வதேச ரீதியில் அதற்குநல்ல வரவேற்பும் கிடைத்திருக்கிறது. இதையொட்டி சோவியத் யூனியனின் வெளியுறவுக் கொள்கைகளிலும் சில சீர்திருத்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இத்தகையதொரு நிலையில் கொர்பசேவ் - ஜோர்ஜ்புஷ் உயர் நிலைப் பேச்சுக்களும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட உடன்படிக்கைகளுமே மார்க்கிரட் தட்சரின் இவ் அறைகூவலுக்கு முக்கிய காரணமாக அமைகின்றது.

### முஸ்லிம் நாடுகளின் ஆதிக்கம்

அதேவேளை ஐரோப்பா முஸ்லிம் நாடுகளின் ஆதிக்கத்திற்கு அல்லது செல்வாக்கிற்கு உட்பட்டுவிடுமோ என அவர் கருதுகிறார், அஞ்சுகிறார். ஏனெனில் அதற்கான சந்தர்ப்பம் வாய்ப்புக்களும் கனிந்து இருக்கின்றன.

தனியே எண்ணை வளங்களைப் பெறுவதற்காக மட்டும் தமது பாதுகாப்பைப் பேண வேண்டும் எனப் பிரித்

தும் இதனை ஆதரித்துப் பேசினார். மறைமுகமாக இஸ்ரேலுக்கு எதிரான போராட்டம் என்ற வகையில் மத்திய கிழக்கு நாடுகள் இராணுவ, அணு ஆயுதங்களை உற்பத்தி செய்கின்றன.

### ஈராக்கின் நடவடிக்கை

அண்மையில் ஆயுதங்கள்சிலவற்றைக் ஈராக்கிற்குக் கடத்திக் கொண்டு செல்ல முற்பட்டது என்று ஈராக்கியர் ஐவர் பிடிபட்டமையானது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேபோன்ற நடவடிக்கைகள் ஐரோப்பியநாடுகள்மீதும் குறிப்பாக மேற்குலக ஐரோப்பியநாடுகள்மீதும்இவர்களால் மேற்கொள்ளப்படலாம்என்ற அச்சத்தினை ஏற்படுத்தி ஐரோப்பாவில் ஆயுதத் தளத்தினை வைத்திருக்கப் பிரித்தானியப்பிரதம மந்திரி விரும்புகிறார்.

ஐரோப்பா மத்திய கிழக்கு நாடுகளை நம்பியிருக்கிறது என்ற அர்த்தத்தில் மார்க்கிரட் தட்சர் இக்கருத்தினை வெளியிட்டிருக்கிறார்.

### தேவையே மத்திய கிழக்கு

கடந்த 3/4 நூற்றாண்டுகளுக்கு மேலாக 'கம்யூனிசம்' என்ற வார்த்தைப்பிரயோகம் மூலம் இதனைச் சாதிக்க முடிந்த பிரித்தானியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இப்போது இராணுவதளத்தை, பலத்தை பேணுவதற்கு ஒரு "தேவை'' ஏற்பட்டது. அத்தேவையே "மத்தியகிழக்கு'' என்ற பிரச்சார தந்திரோபாயமாகும்.


தமது பிரதேசங்களில் இராணுவ பலத்தைப் பேணுவதன்

இங்கு அமெரிக்க தந்திரோபாயம் வெற்றி அளித்திருக்கிறது என்பதையே பிரதமரின் இப்பேச்சு எடுத்துக் காட்டுகிறது.

முதலில் சோவியத் யூனியனுக்கு எதிராக பிரித்தானியாவில் இருந்து சோவியத் ராஜதந்திரிகளை வெளியேற்றிமை என்பது இங்கு கவனிக்கத் தக்கது.

ஆனால் சோவியத் யூனியனோ அதேமாதிரி சோவியத்திலுள்ள அமெரிக்க ராஜதந்திரிகளை வெளியேற்றி ஐரோப்பிய மக்களுக்கு தட்சரின் நடவடிக்கையால்தான் இது நடைபெற்றது என்பதை சுட்டிக் காட்டியது.

ஆகவே மார்க்கிரட் தட்சரின் இராணுவ தளங்களுக்கான ஒரு தேவையே இவ்



வேண்டும்கோள் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

கடந்த வருடம் நிருபர்கள் மாநாட்டின்போது தட்சர் கூறிய கருத்தானது அவர் எவ்வளவு தூரம் அணுவாயுதங்களையோ, இராணுவ பலத்தையோ விரும்புகிறார் என்பதைக் காட்டுகிறது.

"அணுவாயுதத்திற்கு அஞ்சித்தான் போர் நடைபெறாதுள்ளது. சமாதானத்தை நான் விரும்புகிறபடியால் அணு ஆயுதத்தையும் விரும்புகிறேன்'' என்று கூறியமை



கடந்த 3/4 நூற்றாண்டுகளுக்கு மேலாக "கம்யூனிசம்'' என்ற வார்த்தைப் பிரயோகம் மூலம் இராணுவ தளத்தினை வைத்திருக்க முடிந்தபிரித்தானியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இப்போது இராணுவத்தளத்தை, பலத்தை பேணுவதற்கு ஒரு "தேவை'' ஏற்பட்டது. அத் தேவையே "மத்திய கிழக்கு'' என்ற பிரச்சார தந்திரோபாயமாகும்.

தானியப் பிரதம மந்திரி கருதவில்லை.

அதற்கு மாறாக மத்திய கிழக்கு நாடுகள் எதிர்காலத்தில் தமக்குத் தாமே சில விதி

★ உமா ★

முறைகளை ஏற்படுத்திப்பலம் பொருந்திய நாடுகளாக வருகின்றன.

### உச்சி மகாநாட்டுத் தீர்மானம்

அண்மையில் நடைபெற்ற

மூலமும், அணு ஆயுதபலத்தை அதிகரிப்பதன்மூலமும் மத்திய கிழக்கு நாடுகளை அச்சுறுத்தி வைக்கலாம் என்றும் ஆயுதங்களை வைத்திருக்கலாம் என்றும் அவர் நம்புகிறார்.

இனி ஒருஉலக யுத்தம் நிகழுமானால் அதன் பலாபலன்களை எதிர்நோக்கும் சக்தி ஐரோப்பிய மக்களிடையே இல்லை

### ஐரோப்பிய மக்களின்

## சமாதானக் குழு புனரமைப்பு

கல்லாறு விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் திரு. வி. தயாபரன் தலைமையில் கல்லாறு சமாதானக் குழு புனரமைப்புக் கூட்டம் நடைபெற்றது. பின்வருமாறு உத்தியோகத்தர்கள்தெரிவு இடம் பெற்றது.

தலைவர்- திரு. த. கணபதிப்பிள்ளை பாடசாலை அதிபர், செயலாளர் திரு. கோ.நடராசா ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர், பொருளாளர் செல்வி அம்பிகை அரியக்குட்டி. அத்துடன் பின் வருவோர் நிர்வாக சபை உறுப்பினர்களாக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். திருவாளர்கள் த. சித்திராங்கன், சி. இமானுவேல் த. நாகராசா, த. சுப்பிரமணியம், த. தனம்ஜெயராஜா பொ. தருமநாயகம், சோமசுந்தரம். (45)

## புங்குடுதீவில் புலிகளின் குரல்

புங்குடுதீவு சந்தையடியில் "புலிகளின் குரல்'' அறிவிப்புப் கட்டிடம் ஒன்று புதிதாக கட்டப்பட்டுள்ளது. இதேபோன்ற கட்டிடம் ஒன்று முன்னர் இவ்விடத்தில் இருந்ததாயினும் இந்திய இராணுவத்தின் வருகைக்குப் பின்னர் இது உடைத்து எறியப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆலடிச் சந்தியிலும் இது போன்ற புலிகளின் குரல் உடைத்தெறியப்பட்டது. தற்போது ஆலடிச் சந்தியில் கரும்பலகை ஒன்றே புலிகளின் குரல் அறிவிப்பு பலகையாக வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் வீர வேங்கை அரிஹரன் நினைவாக அமைக்கப்பட்ட மெழுகு திரி ஒன்றும் உடைத்தெறியப்பட்டு கிடக்கின்றது.

## வடிகால்கள் கழுவப்படுவதில்லை

குருநகர் பகுதிகளில் குறிப்பாக மவுண் கார்மல் வீதி, அடப்பன் வீதி வடிகால்கள் நீண்ட நாட்களாக கழுவப்படாமல் இருந்து வருகிறது.

குப்பை கூழங்கள் வடிகால்களில் நிரம்பி துர்நாற்றம் மூக்கைப் பொத்தும் படியாக ஏற்பட்டுள்ளது.

கழிவுநீர் பெருகும்போது குப்பை கூழங்கள் அடித்துச் செல்லப்படாததால் தேங்கி உறைந்து வெயில்பட்டுப் புளித்து நாறுவதுடன் நுளம்பு மற்றும் தொற்று நோய்க் கிருமிகளும் பெருகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நயினாதீவு நாகபூசணி வருடாந்த மகோற்சவம்

ஜனாதிபதி பிரேமதாசா துணிச்சலுடன் எடுத்துக் கூறியிருப்பது பாராட்டுக்குரியது.

இதேசமயம் திரு. பிரேமதாசா ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் இப்பொழுது இலங்கை அரச படைகளுக்கும் விடுதலைப்புலி வீரர்களுக்குமிடையில் முதல்தடவையாக மோதல் ஏற்பட்டிருக்கிறது.

இந்த மோதலிலும் லலித்அத்துலத்முதலி தேசியபந்தோபஸ்து அமைச்சராக இருந்தபோது வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட கூலிப் பட்டாளங்களான மொஸாட், எஸ். ஏ. எஸ். போன்றவை பழக்கிக் கொடுத்த பேடித்தனமான போர்முறையே பின்பற்றப்பட்டு வருகிறது.

இஸ்ரேலின் நலன்காக்கும் பிரிவை அமெரிக்காவின் ஆட்சேபனையையும் பொருட்படுத்தாமல் மூடி அங்கு இருந்தவர்களைத் திருப்பி அனுப்பியவர் ஜனாதிபதி பிரேமதாசா.

ஆனால் புலிகளுக்கும் சிறிலங்கா அரசபடைகளுக்கும் கடந்த ஐந்து நாட்களாக நடந்துவரும் போரில் சிறிலங்கா அரசபடைகள் இஸ்ரேலிய மொஸாட் பாணி போர் முறையையே கடைப்பிடித்து வருகிறது.

மன்னன் எல்லாளனும் துட்டகைமுனுவும் தங்கள் படைகளை போர்க்களத்துக்கு வழிநடத்திச் சென்று நேருக்கு நேர் நின்று போரிட்டார்கள்; பொதுமக்களுக்கு எந்தவித தீங்கும் நேராமல் பார்த்துக்கொண்டார்கள்.

இஸ்ரேலியமொஸாட்பாணியுத்தம் பேடித்தனமானது. இராணுவம் வெளியே வராமல் முகாமுக்குள் பதுங்கியிருந்தபடியே பொதுமக்கள் வாழும் பகுதிகளுக்கு கண்மூடித்தனமாக 'ஷெல்' அடிப்பது இந்தவகையுத்தம்.

இதேசமயம் ''ஹெலிக்கொப்ரர்களிலிருந்தும் கண்மூடித்தனமாக பொதுமக்கள் வாழும் பகுதிகளில் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதும் விமானங்களிலிருந்து மக்கள் வாழும் பகுதிகளில் குண்டுவீசித் தாக்குவதும் மொஸாட்பாணி யுத்தமாகும்.

கடலிலிருந்து போர்க்கப்பல்களிலிருந்து பீரங்கித் தாக்குதலைக் கண்மூடித்தனமாக மக்கள் வாழும் பகுதிகளில் மேற்கொள்வதும் மொஸாட்பாணி பேடித்தனமான யுத்தமுறையேயாகும்.

இவற்றுடன் இராணுவச் சிப்பாய்களும் காடையர்களும் தங்கள் எல்லைக்குள் வாழும் பொதுமக்களை கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்துவதும் மொஸாட், அத்துலத் கலந்த யுத்தபாணியாகும்.

பகைவனையும் மதிக்கும் துட்டகைமுனுவைப்பற்றி மொஸாட்பாணி பேடித்தனமான யுத்தத்தை உடன் நிறுத்துமாறு ஜனாதிபதி பிரேமதாசா தமது முப்படைகளுக்கும் உத்தரவிடுவாரா?

சிறிலங்கா படைகளும் புலிப்படைகளும் நேருக்குநேர் களத்தில் மோதி முடிவுகாணட்டுமே! அப்பாவி மக்கள் அநியாயமாகப் பலியாக வேண்டிய அவசியமில்லையே!

இதற்கு முன்னர் பிரித்தானியப் பிரதம மந்திரியின் இந் நோக்கின் பின்னணியினைப் பார்ப்போம்.

### கம்யூனிச பிரச்சாரம்

இதுவரை காலமும் சோவியத் யூனியனையும், கம்யூனிச கருத்துக்களையும் முன் வைத்தே மேற்குலக நாடு



கள் தமது இராணுவ - அரசியல் பலத்தை வளர்த்து வந்தன.

ஆனால் சோவியத் யூனியனில் கொர்பசேவின் ஆட்சியினால் ஏற்பட்ட மாற்றங்கள் ஜேர்மனி ஒன்றிணைப்பிற்கான பேச்சுக்கள் இவையாவும் இத்தகையதொரு சூழ்நிலையில் மாற்றத்தினைஏற்படுத்தியது.

''கம்யூனிசம்'' என்ற வார்த்தைப் பிரயோகம் மூலம் இராணுவ தளத்தினை வைத்திருக்க முடிந்தபிரித்தானியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இப்போது இராணுவத்தளத்தை, பலத்தை பேணுவதற்கு ஒரு ''தேவை'' ஏற்பட்டது. அத் தேவையே ''மத்திய கிழக்கு'' என்ற பிரச்சார தந்திரோபாயமாகும்.

தானியப் பிரதம மந்திரி கருதவில்லை.

அதற்கு மாறாக மத்திய கிழக்கு நாடுகள் எதிர்காலத்தில் தமக்குத் தாமே சில விதி

★ உமா ★

முறைகளை ஏற்படுத்திப்பலம் பொருந்திய நாடுகளாக வருகின்றன.

### உச்சி மகாநாட்டுத் தீர்மானம்

அண்மையில் நடைபெற்ற அரபு நாடுகளின் உச்சி மகாநாட்டில் முஸ்லிம் தலைவர்களால் சில முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த வகையில் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் உசைன் கூறிய கருத்தானது இங்கு கவனிக்கத்தக்கது.

இஸ்ரேலுக்கு உதவி செய்கிறது. ஆதரவளிக்கிறதுஅமெரிக்கா என்ற வகையில் அந் நாட்டின் மீது பொருளாதார தடையினை மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை பெரும்பாலும் முஸ்லிம் தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் மூலமும், அணுஆயுதபலத்தை அதிகரிப்பதன்மூலமும் மத்திய கிழக்கு நாடுகளை அச்சுறுத்தி வைக்கலாம் என்றும் ஆயுதங்களை வைத்திருக்கலாம் என்றும் அவர் நம்புகிறார்.

இனி ஒருஉலக யுத்தம் நிகழுமானால் அதன் பலாபலன்களை எதிர்நோக்கும் சக்தி ஐரோப்பிய மக்களிடையே இல்லை

### ஐரோப்பிய மக்களின் அச்சம்

ஆகவே தான் அவர்கள் பகிரங்கமாக கொர்பசேவ்-ஜோர்ஜ் புஷ்ஷின் பேச்சுவார்த்தையை வரவேற்றனர். ஏன் எனில்போர் மூண்டால் அதன் தாக்கம்ஐரோப்பாமீதேதள்ளி விடப்படும் என்பதை ஐரோப்பிய மக்கள் நன்குணர்ந்துள்ளனர்.

ஆகவே குறுந்தூர, நெடுந்தூர ஏவுகணைகளைத் தமது பிரதேசத்தில் வைத்திருக்க விரும்பமாட்டார்கள்

### அமெரிக்காவின் தந்திரம்

ஆனால் பிரித்தானிய பிரதமர் அமெரிக்காவின் கையாளாக செயல்படுகிறது.

எவ்வளவு தூரம் அணுவாயுதங்களையோ, இராணுவ பலத்தையோ விரும்புகிறார் என்பதைக் காட்டுகிறது.

''அணுவாயுதத்திற்கு அஞ்சித்தான் போர் நடைபெறதுள்ளது. சமாதானத்தை நான் விரும்புகிறபடியால் அணு ஆயுதத்தையும் விரும்புகிறேன்'' என்று கூறியமை



எமக்கு இதனை தெளிவாக விளக்குகின்றது.

### இரண்டு முடிவுகள்

இவற்றில் இருந்து நாம் இரண்டு விடயங்களை விளங்கிக் கொள்ளலாம்.

1. இஸ்லாமிய நாடுகளின் பொருளாதார, அணு ஆயுத, இராணுவபலத்திற்கு ஐரோப்பிய நாடுகள் அஞ்சுகின்றன.

2 ஐரோப்பிய நாடுகளில் தளர்ச்சியற்ற இராணுவ போக்கை கடைப்பிடிக்க விருப்புகின்றது.

எனவே இவற்றினை பின்னணியாகக் கொண்டே தட்சரின் பேச்சினை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

## வடிகால்கள் கழுவப்படுவதில்லை

குருநகர் பகுதிகளில் குறிப்பாக மவுண் கார்மல் வீதி, அடப்பன் வீதி வடிகால்கள் நீண்ட நாட்களாக கழுவப்படாமல் இருந்து வருகிறது.

குப்பை கூழங்கள் வடிகால்களில் நிரம்பி துர்நாற்றம் மூக்கைப் பொத்தும் படியாக ஏற்பட்டுள்ளது.

கழிவுநீர் பெருகும்போது குப்பை கூழங்கள் அடித்துச் செல்லப்படாததால் தேங்கி உறைந்து வெயில்பட்டுப் புளித்து நாறுவதுடன் நுளம்பு மற்றும் தொற்று நோய்க் கிருமிகளும் பெருகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நயினாதீவு நாகபூசணி வருடாந்த மகோற்சவம்

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீநாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இம் மாதம் இருபத்து மூன்றாந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்தும் பதினைந்து நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் இவ் ஆலயத்திற்கு வருகை தர விருக்கும் ஏராளமான யாத்திரிகர்களுக்குமுரிய சகல வசதிகளையும் செய்வதற்கு போக்குவரத்துச் சபையினர், மோட்டார்ப் படகு சேவையாளர், அமுத சுரபி அன்னதான சபையினர், தொண்டர் சபையினர், தாக சாந்தி நிலையத்தினர் அனைவரும் வேண்டிய ஒழுங்குகளைச் செய்துள்ளார்கள் என்று மேற்படி 'ஆலய அறங்காவலர் சபையினர் தெரிவித்துள்ளனர். (22)

## பதவி உயர்விற்கு ஏன் ஒழுங்குமுறை இல்லை

ஆசிரியர்
ஈழநாதம்

அரசாங்க திணைக்களங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு பதவி உயர்வுகளில் ஓர் ஒழுங்கு முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் கல்வி அமைச்சின் கீழ் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வுகளில் ஓர் ஒழுங்கு முறையும் கடைப்பிடிக்கப்படுவதில்லை.

அதிபர் பதவிகளுக்கு ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப் பரீட்சைகள் 1978, 1980, 1988 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்றன. அவற்றுக்கிடையே பதில் அதிபர் நியமனங்கள் வழங்குவதும் அவற்றை நிரந்தரம் ஆக்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பதில் அதிபர்களாக வர யார்தான் விரும்பமாட்டார்கள்? அதற்குரிய வாய்ப்பும் வசதியும் எல்லோருக்கும் கிட்டுவதில்லை. ஒழுங்கு முறையின்றி நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தாலும் பல பிரச்சினைகள் மத்தியிலும் தொடர்ந்து சேவையாற்றியவர்களை நிரந்தரமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்வது நியாயமானதும் வரவேற்கத் தக்கதுமான ஒன்றாகும்.

அதே நேரத்தில் போட்டிப் பரீட்சைகள் மூலம் நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கப்பட்டிருந்தும் பதவி உயர்வு வழங்கப்படாதிருக்கின்ற ஆசிரியர்களின் நிலை பற்றியும் சற்று சிந்திப்பது பொருத்தமானதாகும். 1980ஆம் ஆண்டுப் பரீட்சைப் பெறுபேறு வெளி

மக்கள் மலர்

வரவே இல்லை இருந்தாலும் 1980ஆம் ஆண்டு நடைபெற்ற பரீட்சைக்கு விண்ணப்பிக்குமாறு கோரிய அரசாங்க வர்த்தமானி அறிவித்தலில் 1978ஆம் ஆண்டில் நடைபெற்ற பரீட்சையின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் 1980இல் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தேவையில்லை என குறிப்பிடப்பட்டிருந்தமை யாவரும் அறிந்த விடயமாகும். அந்த அறிவித்தலின் பிரகாரம் தமக்குப் பதவி உயர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருந்த சிலர் தமது செல்வாக்கினைப் பயன்படுத்தி பதவி உயர்வு பெற்றார்கள். சிலர் பதில் அதிபர்களாக இருந்து நிரந்தரமாக்கப்பட்டார்கள். இன்னும் சிலர் உதவி ஆசிரியர்களாகவே இருக்கின்றார்கள். பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தால் ஏறக்குறைய பன்னிரண்டு ஆண்டுகள் அதிபர்களாகக் கடமை புரிந்திருப்பார்கள். அவர்களுள் சிலர் 1988-ல் நடைபெற்ற பரீட்சையின் அடிப்படையிலும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள். சிலர் நிரந்தரமாக்குவதற்குரிய கால எல்லையைப் பூர்த்தி செய்யாத பதில் அதிபர்களாகக் கடமையாற்றுகிறார்கள்.

எனவே 1988 பரீட்சை, பதில் அதிபர் ஆகிய இரண்டினதும் அடிப்படையில் தற்போது வழங்கப்படவிருக்கும் பதவி உயர்வின்போது 1978இல் நடைபெற்ற பரீட்சையின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைகளுக்கு தோற்றியவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பது அவசியமானதும் நியாயமானதுமாகும். எனவே இது விடயமாகப் பொறுப்புள்ள யாவரும் சிந்தித்துச் செயலாற்றி உதவுவார்களென எதிர்பார்க்கின்றோம்.

க. சுப்பிரமணியம்
யாழ்ப்பாணம்.

## நெடுந்தீவு மாவலித்துறைமுகம்

## நிதி போதாமையால் வேலைகள் தாமதம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மாவலித்துறை முகத்தைப் படகுகள் வந்து போகும் விதத்தில் ஆழமாக்கும் வேலைகள் நடைபெறுவதில் கஷ்டநிலை உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

துறைமுகத்தினை ஆழமாக்கும் வேலைக்கு அரசாங்கம் 37 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இத்தொகையைப் பயன்படுத்தி 89 கியூப் சேறு துறைமுகங்களிலிருந்து அள்ளி வெளியேற்றப்பட வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி வேலைக்கு ஒதுக்கப்பட்ட பணம் போதாமையால் இவ் வேலையைப் பொறுப்பேற்றுள்ள நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்நெடுந்தீவிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களினதும் சனசமூக நிலையங்களினதும் மீன்பிடியாளர் சங்கங்களினதும் உதவியைக் கோரியுள்ளது.

பொது நிறுவனங்களின் சிரமதானப் பணி கிடைக்குமெனில் இவ் வேலையைச் செய்து முடிப்பதில் தாமதம் இருக்காது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## உலக வங்கி நிபுணர்கள் கிளிநொச்சி விஜயம்

(கிளிநொச்சி)

உலக வங்கியின் நிபுணர் குழுவொன்று இம் மாதம் 28 ஆம் திகதி கிளிநொச்சிக்கு விஜயம் செய்து இரணை மடுக் குளத்தை பார்வையிட்டு மேற்படி நீர்ப்பாசன பாரிய புனருத்தாரண வேலைகளை மேற்கொள்ளவுள்ளது.

நீர் முகாமைத்துவ நீர்ப்பாசன பணிப்பாளர் திரு. பி. செனிரத்தினா தலைமையில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்யும் இக் குழுவை கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தலைமையில் இரணைமடு திட்ட முகாமையாளர் திரு. வி. கதிரவேலு, மேற்படி திட்ட உப குழுக்கள், மற்றும் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டு வரவேற்பளிப்பர்.

பின் இவர்கள் அனைவருக்கும் இரணைமடுக்குளத்ன்தி பாரிய அபிவிருத்தி பற்றி எடுத்துக் கூறப்படும்.

## நிர்வாகிகள் தெரிவு

(கொழும்புத்துறை)

இலங்கை அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் 29வது வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இப்பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது. விபரம் வருமாறு:-

தலைவர் திரு. தி. மார்க்கண்டு, துணைத்தலைவர்கள் திரு. ஐ. தவராஜன், திரு. சதா. தனபாலசிங்கம், பொதுச்செயலாளர் திரு. செ. பரராஜசிங்கம், துணைச்செயலாளர்கள் திரு மா. கனகநாதன், திரு வை. குமாரசாமி நிதிச்செயலாளர் திரு. க. கனகசபாபதி, துணை நிதிச்செயலாளர்கள் திரு. மா. தில்லைநாதன், திரு. சி. க. இராஜரத்தினம், யாழ். மாவட்ட பிரதிநிதி திரு. ம. ஞானசீலன்

. Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

### பொத்துவிலில் மோதல்

பொத்துவில் இராணுவ முகாமில் சிறீலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல் ஒன்றில் டேவிட், ராவ் என்ற இரண்டு தமிழீழ விடுதலைப் புலி போராளிகள் தமது உயிரை தியாகம் செய்துள்ளனர் இங்கு மோதல் தொடர்கிறது.

# புலிகளுக்கு எதிராக அரசாங்கமும் எதிர்க்கட்சியும் ஒன்றுபட வேண்டும்

## பாராளுமன்றத்தில் ரெலோ திவ்வியநாதன்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று அவசரகாலச் சட்டம் நீடிப்புச் சம்பந்தமான பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதுவடக்கு கிழக்கு நிலவரம்பற்றி பல கட்சியினராலும் பெருமளவில் பிரஸ்தாபிக்கப்பட்டது. அவ்வாறு பிரஸ்தாபிக்கப்பட்ட சிலரது கருத்துக்கள்;

ஐக்கிய சோஷலிச முன்னணி அங்கத்தவர் அத்தாவுட செனவிரத்னா;-

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் அரசாங்கம் நடாத்திய பேச்சுவார்த்தை பற்றிய முழு அறிக்கை ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

பொலிசாரும், ஆயுதப்படையினரும் மாத்திரமே ஆயுதங்களை வைத்திருக்க முடியும். ஆயினும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதங்களை வைத்துக்கொண்டே பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டது. அவர்களிடம் இருந்து ஆயுதங்களைப் பெற்றுக்கொள்வதற்குநடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்றார்.

ஈ. பி. ஆர். எல். எவ். அங்கத்தவர் திரு. ரி. கருணாகரன்;-

வடக்குக் கிழக்கில் ஏற்பட்டுள்ள யுத்தம்போன்ற நிலைமையை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். தமிழீழ விடுதலைப்புலிகளின் செயலைச் சகலசமூகங்களும் கண்டிக்கும். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அப்பிரதேசத்தில் சர்வதிகாரத்தை நிலைநாட்ட முற்படுகின்றது என்றார்.

மக்கள் ஐக்கிய முன்னணி அங்கத்தவர் பந்துல குணவர்த்தனா;-

''அவசரகாலச்சட்டம்தென் பகுதியில் மாத்திரமே அமுலில் உள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஆயுதங்களுடன் சுதந்திரமாக நடமாடுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்'' என்றார்.

போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் யு.எல் எம். பாரூக் ''வடக்கு கிழக்கில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைக்கு உடனடியாக முடிவு காணப்பட வேண்டும்'' என்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அங்கத்தவர் நெவில் பெர்ணான்டோ;-

''நாட்டில் சமாதானம் தேவைப்படுகிறது எனவே நாம் எல்லோரும் இதன் பொருட்டு விழிப்புணர்வுடன் செயற்படவேண்டும்''.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அங்கத்தவர் நிமால் ஸ்ரீபாலடி சில்வா;-

''பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளைப் பொறுத்து எமது கட்சி அதற்கு ஆதரவு வழங்கும்.'' என்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கத்தவர் ஜே திவ்யநாதன்

''ஈழ இராச்சியத்திற்கு அவசியமில்லை. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இரத்தப் பசிகொண்ட ஓர் அமைப்பாகும். இந்த எதிரிக்கு எதிராக அரசாங்கத்தினரும், எதிர்க்கட்சியினரும் ஒரு கொடியின்கீழ் ஐக்கியத்துடன் அணி திரளவேண்டும்'' என்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி திலக் கருணாரத்ன:

''பண்டாரநாயக்கா – செல்வநாயகம்ஒப்பந்தத்தை அமுல் செய்வதற்கு இடமளித்திருந்தால் தற்போதைய நெருக்கடி நிலை தோன்றியிராது எனத் தெரிவித்தார்.

சபாநாயகர் எம். எச். முகமட் ;

ஒரு வாரத்தில் ஒரு தடவையேனும் அரசியல் கட்சித்தலைவர்களைச் சந்தித்து வடக்கு கிழக்கு நிலமைபற்றிய விபரங்களைத்தெரிவிப்ப

## பல்கலைக்கழகத்திற்கு 6300 மாணவர் தெரிவு

(கொழும்பு)

அடுத்த வருட கல்வியாண்டில் சகல பல்கலைக் கழகங்களுக்கும் 6300க்கும் அதிகமான புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்வதற்கு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கடந்த மாதம் டிசம்பரில் நடத்தப்பட்ட க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப்பெற்ற மாணவர்களிடம் இருந்து பல்கலைக் கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

நான்கு பாடங்களிலும் குறைந்த பட்சம் 180 மொத்தப் புள்ளிகளைப் பெற்றவர்களே பல்கலைக் கழக அனுமதிக்காக விண்ணப்பிக்க முடியும்.

கொழும்பு-7 வோட்பிளேஸ் 20ஆம் இலக்கத்திலுள்ள பல்கலைக்கழக மானியக் குழு அலுவலகத்தில் விண்ணப்ப படிவங்களை அடுத்த மாதம் 13ஆம் திகதிவரை பெற்றுக் கொள்ளலாம்.

16ஆம் திகதிக்கு முன்னதாக இவ் விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்க வேண்டும் என பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

## தமிழீழ ஆய்வு நிறுவன கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அவசர நிவாரண பணிகளை மேற்கொள்வதுபற்றி கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ள சகல அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் தமிழீழ ஆய்வு நிறுவனம் அழைப்பு விடுத்துள்ளது. இது தொடர்பாக ஆய்வு நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் இக் கலந்துரையாடல் இன்று பிற்பகல் மூன்று மணியளவில் திருநெல்வேலி இராமநாதன் வீதியிலுள்ள தலைமையலுவலகத்தில் நடைபெறவுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### திருலையில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மலை நகர்ப் பகுதியில் உள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் கடைகளைத் தீ வைத்து எரித்துள்ளனர்.

மேலும் குச்சவெளி, மூதூர்ப் பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்திற்கும் இடையிலான சண்டைகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## கும்புறுமுனை முகாம் புலிகளிடம் விழும் தறுவாயில்

கும்புறுமுனைப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்கும் இடையில் இறுதிக் கட்ட யுத்தம் நடைபெற்று வருகிறது இந்த யுத்த களத்திலிருந்து வரும் செய்திகள் தெரிவிப்பதாவது.

விடுதலைப் புலிகளும் இராணுவத்தினரும் கடந்த மூன்று நாட்களாக மிக நெருக்கமான நிலையில் யுத்தம் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் இராணுவத்தினருச்கு உதவியாக யுத்த விமானங்கள் பெருந் தாக்குதல்களை புலிகள்மீது மேற்கொண்டுவருகின்றன. ஆனால் புலிகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றார்கள்.

அதே வேளை விமானங்கள் இராணுவத்தினரின் முகாமிற்கு உணவுப் பாசல்களைப் போட்ட போது அவை விடுதலைப் புலிகளின் கைகளுககு எட்டியதாக அங் கிடைத்த செய்திகள் கிடைத்துள்ளன.

நேற்று மாலையளவில் கும்புறுமுனை முகாமிலிருந்து இராணுவத்தினரின் எதிர்ப்பு திடீரென குறைக்கப்பட்டிருப்பதுடன் விரைவில்இந்த இராணுவத்தினர் சரணடைவதற்கான அறிகுறிகள் தென்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேபோல கஜுவாஞ்சிக்குடி பகுதியிலும் இராணுவத்தினர் விரைவில் சரணடைவர் என புலிகளின் பகுதியிலிருந்து செய்திகள் கிடைத்துள்ளது.

## கந்தளாயில் வெளியேற்றம்

கந்தளாய் பகுதியில் இலங்கை இராணுவத் தாக்குதல்களால் பதட்டத்துக்குள்ளான பொது மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

இவர்கள் தற்போது அகதிகளாக பாதுகாப்பான இடங்களில் வாழ்வதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஷெல் வெடித்து சிறுவர் மரணம்

(மன்னார்)

அடம்பன் அரசினர் வைத்தியசாலைக்குப் பின்புறமுள்ள வளவொன்றில் பழைய ஷெல் ஒன்று வெடித்ததில் இரு சிறுவர்கள் துடிதுடித்து ஸ்தலத்திலேயே மரணமானார்கள். மேலும் இரண்டு சிறுமிகள் காயமடைந்த நிலையில் பள்ளமடு வைத்திய சாலையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் இச்சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றது.

பழைய இரும்புச்சாமான் விற்பனை செய்யும் குடும்பத்தைச்சேர்ந்த இச்சிறுவர்கள் விளையாட்டாக இச்ஷெல்லை கையாண்ட போதே இவ் விபத்து இடம்பெற்றது. (60)

### கிழக்கில் பல

(1ம்பக்கத் தொடர்ச்சி)

தலைமன்னாரில் இராணுவ முகாமுடன் கடற்படை முகாமையும் விடுதலைப்புலிகள் தமது வசமாக்கி விட்டதாகவும் திருக்கோணமலையில் திரியாய், கன்னியாய், உப்புவெளி இராணுவ முகாங்களையும் புலிகள் கைப்பற்றிக் கொண்டனர். கிழக்கு மாகாணத்தில் புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு சகல சாதனங்களையும் கைவிட்டுத் தப்பி ஓடியிருக்கின்றனர், ஸ்ரீலங்கா இராணுவம் தங்கள் முகாம்களிலிருந்து பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலும் கடற்படைக் கப்பல்களிலிருந்து மக்கள் வாழும் பகுதிகளை நோக்கிப் பீரங்கித் தாக்குதலும் விமானப்படையினர் விமானத்திலிருந்து குண்டு வீசியும், ஹெலிகளிலிருந்து துப்பாக்கிப்பிரயோகம் செய்தும் வருகின்றனர். ஆனால் கிழக்கில் புலிப்படைகள் தரை. மார்க்கமாகத் தாக்குதல் நடத்தி பொலிஸ் இராணுவ முகாம்களைக் கைப்பற்றி முன்னேறிக்கொண்டிருக்கின்றனர். கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளுக்குப் பொதுமக்கள் பெரும் உதவியும் ஒத்துழைப்பும் வழங்கியுள்ளதாக புலிகள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## கிளிநொச்சி மக்கள் பூநகரிக்கு இடம்பெயர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராணுவ முகாமில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து அங்கு பதட்ட நிலை தொடர்கிறது. ஆயிரக் கணக்கான மக்கள் நகர்ப் பகுதியில் இருந்து வெளியேறி பூநகரிப் பகுதியில் தஞ்சமடைந்துள்ளனர்.

பெரும்பாலான வாகனங்களும், மக்களும் தொடர்ச்சியாக யாழ் குடாநாட்டை அடைவதற்கு வந்து கொண்டிருப்பதால் சங்குப்பிட்டித் துறையில் மக்கள் நெரிசலாகக் காணப்படுகின்றனர்.

கேரதீவு துறை ஆய ஊழியர்கள் இரவு பகல் பாராது தொடர்ச்சியாக சேவையில் ஈடுபட்டுள்ளனர். முல்லைத்தீவில் இருந்து வந்த போக்குவரத்துச் சபை பஸ்களும், தனியார் பஸ்களும் பாதையில் ஏற்றப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டது. மு. ப. 11 மணிவரையும் மன்னாரில் இருந்து சங்குப்பிட்டித்துறைக்கு ஒரு சேவையும் நடைபெறவில்லை. மன்னார் செல்ல வந்த பிரயாணிகள் சங்குப்பிட்டியில் காத்து நின்றனர்.

## நியாயப்படுத்த முடியாதாம் அரசு அறிக்கை கூறுகின்றது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நியாயப்படுத்த முடியாத நடவடிக்கைகள் காரணமாக முழுநாடும் எதிர்நோக்கியுள்ள ஆபத்துப்பற்றி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக் [illegible]

யும் ஒருமைப்பாட்டையும் பாது காக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் சில அங்கத்தவர்களின் நடவடிக்கைகளைக் கண்டிப்பதில் எதிர்க்கட்சிகள் அரசாங்கத் [illegible]

அரசாங்கத்தின் கொள்கையாக இருந்துள்ளது சண்டைகள் காரணமாக அப்பாவிப் குடிமக்களின் உயிர்கள் பாதிக்கப்படும். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை ஜனநாயக அமைப்புக்குள் கொ [illegible]

நடத்தப்பட்ட க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப்பெற்ற மாணவர்களிடம் இருந்து பல்கலைக் கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

நான்கு பாடங்களிலும் 13ஆம் திகதிவரை பெற்றுக் கொள்ளலாம்.

16ஆம் திகதிக்கு முன்னதாக இவ் விண்ணப்பப் படிவங்களை அனுப்பிவைக்க வேண்டும் என பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

## தமிழீழ ஆய்வு நிறுவன கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப் பட்ட பகுதிகளில் அவசர நிவாரண பணிகளை மேற் கொள்வதுபற்றி கலந்துரை யாடல் ஒன்றை மேற்கொள்ள சகல அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் தமிழீழ ஆய்வு நிறுவனம் அழைப்பு விடுத் துள்ளது. இது தொடர்பாக ஆய்வு நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் இக் கலந்துரை யாடல் இன்று பிற்பகல் மூன்று மணியளவில் திருநெல்வேலி இராமநாதன் வீதியிலுள்ள தலைமையலுவலகத்தில் நடை பெறவுள்ளது எனவும் குறிப் பிடப்பட்டுள்ளது.

## பாடசாலை உணவுமுத்திரைகள் ஐந்தாம் திகதிக்குமுன்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு நன்பகல் உணவுக்காக வழங்கப்படும் உணவு முத்திரைகள் ஒவ்வொரு மாதம் 5ம் திகதிக்கு முன் வழங்கப் படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த உணவு முத்திரைகளை பயன்படுத்தி கூட்டுறவு சங்கக் கடைகளிலிருந்து உற்பத்திப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான கடைசித் திகதி பற்றிய அறிவுறுத்தல்களை பாடசாலைகளில் மாணவர்களின் பார் வைக்கு வைப்பதெனவும் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

விநியோகத்திட்டம் மாதாந்தம் மீள் பரிசோதனை செய்யப்படும் இவ் வாறாக நேற்று முன்தினம் கல்விய மைச்சினால் நடாத்தப்பட்ட மாநாட்டின்போது தீர்மானம் எடுக்கப்பட்டது.

## யாழ். பொலிஸ் நிலையப் பதிவேடுகள் மக்களால் சூறை

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸ் நிலையம் பொதுமக்களால்சூறையாடப் பட்டது. இதனால் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் தமதுசம்பளப் பணத்தைப் பெற முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். பொலிஸ் நிலையம் விடுதலைப் புலிகள் கைவசமாக்கப்பட்டு உத்தியோகஸ் தர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்ட பின்னர், பொலிஸ் நிலையத்திற்குள்ளே சென்ற சிலபொதுமக்கள் அங் கிருந்த பலபுத்தகங்களையும், பதிவேடுகளையும் பேப்பர்க் கடைக்கு நிறுத்து விற்பதற் காக எடுத்துச் சென்றுள்ளனர்

இவற்றினுள்ளே பல பொலிஸ் உத்தியோகஸ்தர் களின் சேவைக் காலப் பதிவேடுகளும், சம்பளப் பதிவுப் பத்திரங்களும் மற்றும் பல தஸ்தாவேஜுக்களும் அடங் கியுள்ளன. ஆகவே இவற்றை எடுத்தவர்கள் தயவுசெய்து விடுதலைப் புலிகள் காரியாலயத்திலோ அல்லது யாழ். போதனா வைத்தியசாலைப் பொலிஸ்பிரிவிலோஒப்படைக் கும்படி யாழ். பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கேட்டுள்ளனர். (ம)

### இந்திய உதவியை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்குமிடையில் நடைபெறும் யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் சமரசம் செய்து கொள்வதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் உதவியை சிறிலங்கா அரசு நாடியிருப்பதாகத் தெரிய வருகிறது.

புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதுவர் கலாநிதி ஸ்ரான்லி கல்பகே இருதினங்களுக்குமுன் சென்னையில் முதல்வர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசியது தெரிந்ததே.

முற்படுகின்றது என்றார்.

மக்கள் ஐக்கிய முன்னணி அங்கத்தவர் பந்துல குணவர்த்தனா;-

''அவசரகாலச்சட்டம்தென் பகுதியில் மாத்திரமே அமுலில் உள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஆயுதங்களுடன் சுதந்திரமாக நடமாடுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்'' என்றார்.

### திருமலையில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மலை நகர்ப் பகுதியில் உள்ள தமிழ்,முஸ்லிம்மக்களின் கடைகளைத் தீ வைத்து எரித்துள்ளனர்.

மேலும் குச்சவெளி,மூதூர்ப் பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்திற்கும் இடையிலான சண்டைகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

கடந்தபதின்மூன்றாம் திகதி உப்புவெளி, திருக்கோணமலை நகரம், கிண்ணியா, அபயபுரம் ஆகிய பொலிஸ் நிலையங்கள் விடுதலைப் புலிகளால் கைப் பற்றப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். திருக்கோணமலை மடத்தடியிலும் சண்டைகள் தொடர்ந்துநடைபெற்று வருகிறது. (அ)

### கொழும்பில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வத்தை பிள்ளையார் கோவில் முன்றலில் அப்பாவிகள் என அறியப்பட்ட இருபது இளைஞர்கள் விடுதலை செய்யப் பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் இன்னுமோர் செய்தி தெரிவிக்கின்றது ஏனையர் இளைஞர்கள் என்ன ஆனார்கள் என்ற விபரம் இதுவரை தெரியவரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்,

### ஹெலி

1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டது. இதனால் ஆனையிறவிலும் குறிஞ்சாத் தீவிலும் வசிக்கும் மக்கள் தண்ணீர் தட்டுப்பாட்டுக்கு உள்ளாகி இருக்கின்றனர். இந்த தண்ணீர் தாங்கியில் இருந்து தான் இராணுவ முகாமிற்கு தண்ணீர் செல்வது என்பது குறிப்பிடத் தக்கது.

இத்தாக்குதலை அடுத்து ஆனையிறவு முகாமைச் சுற்றி புலிகள் பலத்த பாதுகாப்பை ஏற்படுத்தி உசார் நிலையில் நிற்கின்றனர். இடை இடையே ஷெல் சத்தங்கள் கேட்டுக் கொண்டு இருப்பதனால் போக்கு வரத்துக்கள் யாவும் பளையுடன் துண்டிக் கப்பட்டுள்ளன,

### புனானையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தாக்குதல்களை மேற்கொண்ட இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குலில் இராணுவத்தினர் பலர் உயிரிழந்துள்ளனர்.

''ஈழ இராச்சியத்திற்கு அவசியமில்லை. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இரத்தப் பசிகொண்ட ஓர் அமைப்பாகும். இந்த எதிரிக்கு எதிராக அரசாங்கத்தினரும், எதிர்க் கட்சியினரும் ஒரு கொடியின்கீழ் ஐக்கியத்துடன் அணி திரளவேண்டும்'' என்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி திலக் கருணாரத்ன:

''பண்டாரநாயக்கா – செல்வநாயகம்ஒப்பந்தத்தை அமுல் செய்வதற்கு இடமளித்திருந்தால் தற்போதைய நெருக்கடி நிலை தோன்றியிராது எனத் தெரிவித்தார்.

சபாநாயகர் எம். எச். முகமட் ;

ஒரு வாரத்தில் ஒரு தடவையேனும் அரசியல் கட்சித்தலைவர்களைச் சந்தித்து வடக்கு கிழக்கு நிலமைபற்றிய விபரங்களைத்தெரிவிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன்விஜேரத்தினா இணங்கியுள்ளார். தற்போதயநிலைமைக்கு தீர்வு காண அனைவரும் அணி திரளவேண்டும் என்றார்.

## இறைகாமத்தில் போராளி மரணம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் இறைகாமம் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் சிறீலங்கா இராணுவத்தினருக்கும் இடையிலான சண்டையில் விடுதலைப் புலிகள் போராளி சாந்தன் வீரமரணம் அடைந்துள்ளார்.

### மன்னாரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது அப் பகுதியில் அமைதி நிலவுவதுடன் கைப் பற்றபட்ட ஆயுதங்கள் அனைத்தும் விடுதலைப் புலிகளால் பரீட்சித்துப் பார்க்கப்பட்டு வருகிறது என அப்பகுதியிலிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதல்களில் இரண்டு தமிழீழ விடுதலைப் புலி போராளிகள் உயிர்த் தியாகம் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

### பலாலியிலும்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் வீடுகளை விட்டு வெளியேறி வருகின்றனர்.

இச் செய்தி எழுதப்படும் வரை 25 பேருக்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

### தமிழ் பயணிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேருந்து வண்டி ஒன்று இடைமறிக்கப்பட்டு சிங்கள காடையர்களால் உள்ளே இருந்தவர்கள் வெளியே இழுக்கப்பட்டு பத்து தமிழ், முஸ்லிம் மக்கள் வெட்டிக்கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

சாலையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் இச்சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றது.

பழைய இரும்புச்சாமான் விற்பனை செய்யும் குடும்பத்தைச்சேர்ந்த இச்சிறுவர்கள் விளையாட்டாக இச்ஷெல்லை கையாண்ட போதே இவ் விபத்து இடம்பெற்றது. (60)

பகுதியில் இருந்து வெளியேறி பூநகரிப் பகுதியில் தஞ்சமடைந்துள்ளனர்.

பெரும்பாலான வாகனங்களும், மக்களும் தொடர்ச்சியாக யாழ் குடாநாட்டை அடைவதற்கு வந்துகொண்டிருப்பதால் சங்குப்பிட்டித் துறையில் மக்கள் நெரிசலாகக் காணப்படுகின்றனர்.

யில் ஏற்றப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டது. மு. ப. 11 மணிவரையும் மன்னாரில் இருந்து சங்குப்பிட்டித்துறைக்கு ஒரு சேவையும் நடைபெறவில்லை. மன்னார் செல்ல வந்த பிரயாணிகள் சங்குப்பிட்டியில் காத்து நின்றனர்.

# நியாயப்படுத்த முடியாதாம் அரசு அறிக்கை கூறுகின்றது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நியாயப்படுத்த முடியாத நடவடிக்கைகள் காரணமாக முழுநாடும் எதிர் நோக்கியுள்ள ஆபத்துப்பற்றி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் ஐக்கிய முன்னணி ஐக்கிய சோஷலிச முன்னணி ஈ. பி. ஆர். எல் எப் ரெலோ ஆகியன அடங்கிய எதிர்க்கட்சிகள் தெரிவித்த கவலையை அரசாங்கம் கவனத்திற்கு எடுத்துக் கொண்டுள்ளது என நேற்று அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது

இவ்வறிக்கையில் மேலும் கூறப்படுவதாவது.

இத்தகைய தேசிய நெருக்கடி மிகுந்த கால கட்டத்தில் நாம் அனைவரும் ஐக்கியத்துடன் செயற்பட்டு எமது பிரதேசத்தின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் பாது காக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் சில அங்கத்தவர்களின் நடவடிக்கைகளைக் கண்டிப்பதில் எதிர்க்கட்சிகள் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவது பாராட்டிற்குரியது இதே வேளையில் நல்லிணக்கம், நல்லெண்ணம் ஆகியவற்றி அடிப்படையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் எடுத்து வரும் பெரு முயற்சியைச் சிறுமைப் படுத்துவதற்கு எதிர்க்கட்சிகள் முயன்று வருவது துரதிர்ஸ்டவசமானதாகும்.

தேசியப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை கலந்துரையாடல் என்பனவற்றின் மூலம் தீர்வுகாண்பதே ஜனாதிபதி பிரேமதாசா அரசாங்கத்தின் கொள்கையாக இருந்துள்ளது சண்டைகள் காரணமாக அப்பாவிப் குடிமக்களின் உயிர்கள் பாதிக்கப்படும். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை ஜனநாயக அமைப்புக்குள் கொண் வருவதற்கு அரசாங்கம் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வரும் இவ்வேளையில் இராணுவத்தினர்மீதும் பொலிசார்மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பது துரதிர்ஸ்டவசமானதாகும் மாகாண சபையைக் கலைப்பதற்குஇடமளிக்கும் நகல் சட்டம் அரசியல் யாப்புக்கு முரணானதல்ல என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. எனவே ஜனநாயக வழியில் சேர்ந்து கொள்வதற்கு தற்போதுவழியேற்பட்டிருக்கிறது. எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மூதூரில் வெட்டிக் கொலை.

(மூதூர்)

மூதூர்ப்பகுதியில்சிறிலங்கா கடற்படையினர் பொதுமக்கள் வாழும்பகுதிகளைநோக்கி பீரங்கிப் படகுகளில் இருந்து தாக்குதல்கள் நடத்தியதால் அப்பகுதியில் வாழும் பொது மக்கள் மூவர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் அப்பகுதியில் தொடர்ந்து இருக்க முடியாததால் கரையோர வீடுகளை விட்டு உள்ளூர் பகுதிக்கு மக்கள் அகதிகளாக சென்றுள்ளனர்.

கடந்த பதின்மூன்றாம் திகதி தம்பலகாமம் ஜெயபுர வீதியில் மூன்று பொதுமக்கள் சிங்கள காடையர்களாலும் இராணுவத்தாலும் வெட்டிக் கொல்லப் பட்டுள்ளனர்.

இம்மூவரது சடலங்களும் போராளிகளால் எடுத்துச் செல்லப் பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

## யானைகள் அட்டகாசம்

(மன்னார்)

காட்டு யானைகளின் மூர்க்கத்தனமான தாக்குதலின் விளைவாக வீடொன்று தரை மட்டமானது. அத்திவாரத்துடன் இப்போது இவ் வீடு காட்சியளிக்கிறது முதலியார் கமப் பகுதியைச் சேர்ந்த முத்துக்குமாரு என்பவரின் வீடே இத் தாக்குதலுக்கு உள்ளானது.

அடிக்கடி இப் பகுதியில் காட்டு யானைகள் இரவு நேரங்களில் நுழைவதும் வீடுகளையும், மக்களையும் தாக்குவதுடன் பயிர்களை நாசம் செய்து வருவதும் சாதாரண நிகழ்ச்சியாகி விட்டது. (60)

## மாணவன் கிணற்றில் வீழ்ந்து மரணம்

பாடசாலைக் கிணற்றில் தண்ணீர்அள்ளச்சென்ற மாணவன் கிணற்றில் தவறி விழுந்து மரணமானார்.

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த சோமசுந்தரத்தின்மூன்றாவது மகன் பிரபாகரன் (வயது-9) கோப்பாய் நாவலர் பாடசாலையில் படிப்பவர். இவர் நேற்று மத்தியானம்சாப்பிட்ட பின்னர் குடிப்பதற்காகக் கிணற்றில் தண்ணீர் அள்ளும் போது தவறிவிழுந்துவிட்டார் இவர் உடனே யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்படும்போது வரும்வழியிலேயே இறந்துவிட்டார். (ம)

## மினிவான்விபத்து 5 பேர் காயம்

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த வான் கொழும்புத்துறைச்சந்தியில் உள்ள மதகுடன் மோதியதில் சாரதி உட்பட ஐந்துபேர் படுகாயம். அடைந்தார்.

சாரதியின்பக்கமே மதகுடன் மோதியதால் சாரதியே பெரிதும் தாக்கப்பட்டார். இவர் கொழும்புத்துறையைச் சேர்ந்த ராஜி (வயது 25) ஆவர். இவர் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ம)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.